Regd. M. No. 4565

தமிழ் மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

(TAMIL SIDDHA MEDICAL MAGAZINE)

மலர் 5 | பிப்ரவரி—மார்ச் 1945 | இதழ் 1-2.

ஆசிரியர்:

தமிழ்ப் பண்டிதரும், மருத்துவ பண்டிதருமான

மாங்காடு. வடிவேலு முதலியார்.

உரிமையாளர்:

காரியக்கமிட்டியார் : சித்த மாணவர் கழகம்.
கவர்ன்மெண்ட் இந்திய மருத்துவ பாடசாலை

கீழ்ப்பாக்கம், மதராஸ்.

Printed by P Govindaraja Pillay at the Rudisill Press,
No 7, Nallanna Mudaly Street, Royapettah
and Published by C. M. Raja Jegatheesan,
at Govt. School of Indian Medicine, "Hyde Park"
Poonamallee High Road, Kilpauk, Madras

தி நியோ ரெமடீஸ் மானுபேக்சரிங் கம்பெனி

ராமச்சந்திரபுரம், புதுக்கோட்டை ஸ்டேட்,

—:: தென் இந்தியா. ::—

NEO-GRIPE

நியோ-கிரைப் குழந்தைகள் எவ்வித பயமுமின்றி நோய் அணுகாமலும் இருப்பதற்கு இது ஒரு முக்கிய ஔஷதமாகும். குழந்தைகளுக்கு ஏற்படும் குடல் சம்பந்தமான வயிற்று வலி, புளிப்பு வாந்தி, அசீரணம், வயறு உப்பிசம் போன்ற வியாதிகளுக்கு இது கை கண்ட மருந்தாம். குழந்தைகள் இருக்கும் ஒவ்வொரு வீட்டிலும் இது இருக்கவேண்டியது மிகவும் அவசியம். குழந்தைகளுக்கென பக்குவமான முறையில் உயர்தர மருந்துகளினால் செய்யப்பட்டது.

NEO-PHLOGESTINE

நியோ-பிளாஜிஸ்டின் இது நிமோனியா முதலிய சுவாசாசய ரோகங்கட்கும், கட்டி, பிளவை, சூலை முதலிய வீக்கங்கட்கும் மேல் பூச்சாக பூச விரைவில் குணம் அளிக்கும். பக்குவமான முறையில் உயர்ந்த ஔஷதங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது.

BABA'S-CURE

பாபாஸ்-க்யூர் இருமல், இளைப்பு, சுவாசகாசம் (Asthma) முதலிய ரோகங்களுக்கு இதை நெருப்பிலிட்டு புகை பிடிக்க தொந்திரவு நீங்கி, உடனே சுகம் காணலாம். இது கைதேர்ந்த முறையில் செய்யப்பட்டுள்ளது.

(இம்மருந்துகள் எல்லா மருந்துகடைகளிலும் கிடைக்கும்.)

தமிழ் மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

மலர் 5 | பிப்ரவரி 1945 | இதழ் 2

நான்காம் ஆண்டு அறிக்கை

சென்ற 1944-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5-ம் தேதி நமது தமிழ் மருத்துவப் பொழிலின் மூன்றும் ஆண்டு நிறைவு விழாவை வெகு சிறப்பாக நடத்தினேம். அப்போது தமிழ்ப் பேராசிரியர் ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள் நமது பொழிலிலுள்ள கட்டுரைகள் சிறந்தவை என்றும், இனிய நடையில் இலக்கிய மேற்கோள்களுடன் எழுதப்பட்டவை என்றும் விளக்கினர். இப்பொழுதும் அது மாதமாதம் அத்தன்மைகளுடனே வெளிவருகிறது. ஆனல் நம் மாணவர்களின் வேலை நிறுத்தத்தினல் தடைப்பட்டு இரண்டு மாதங்கள் வெளிவரவில்லை. ஆகையால் அவ்வாண்டு சுமார் நூறு பக்கங்களே அச்சிடப்பட்டன. இவையாவும் கட்டுரைகளே. உலகப் போரினல் ஏற்பட்ட காகித பஞ்சத்தினலும், அதிக விலைவாசிகளினலும் பழைய நூல்களை அச்சிடவேண்டுமென்ற நமது முக்கிய நோக்கம் சிறிதும் நிறைவு பெறவில்லை. இதற்கு நாம் மிக வருந்துகிரேம்.

பொழிலுக்குக் கட்டுரைகள் எழுதி உதவிய திருவாளர்கள் பசுபுலேட்டி கன்னைய வீரராகவன், பி. சுப்பிரமணியம் எல்.ஐ.எம்., கே. இராதாகிருஷ்ணன் எல்.ஐ.எம்., ஆர். தியாகராஜன் எல்.ஐ.எம்., பண்டிட் மாங்காடு - வடிவேலு முதலியார், கோ. துரைராசன் எல்.ஐ.எம். இவர்களுக்கும் மற்றும் பலவிதமாக உதவியவர்களுக்கும் நமது நன்றி என்றும் உரித்தாகுக. சென்னை இந்திய மருத்துவப் பள்ளியிலிருந்து வரும் வெளியீடு இது ஒன்றுதான் இதை விடாது நடத்திவரும் பெருமை சித்தமாணவர்களுக்கு மட்டுமன்றி, இதை ஆதரித்து வரும் தமிழ் மருத்துவர்களுக்கும் உரியதே.

இப்பொழிலை இன்னும் சிறப்பாக நடத்தி இந்திய மருத்துவத்தை முன்னணிக்குக் கொண்டுவர வேண்டுமென்பது நமது நோக்கம். இதுவே பலருடைய எண்ணம். ஆகையால் தங்கள் சுயநலத்தைக் கருதாது, உடல் வருத்தத்தையும் பாராது பல கட்டுரைகளை எழுதி உதவுமாறு தமிழ் மருத்துவர்களையும் மருத்துவ ஆசிரியர்களையும் கேட்டுக் கொள்கிறோம்.

இதற்குரிய சந்தா ரூ. 2-யும், தங்களால் இயன்ற நன்கொடையையும் நாங்கள் ஞாபகப் படுத்தாமலேயே அனுப்புவீர்கள் என்று நம்புகிறோம்.

இங்ஙனம்:
சித்தமாணவர் கழகம்
இந்திய மருத்துவப் பள்ளி, கீழ்ப்பாக்கம்.

அனுபவ முறைகள்

(கே. ராதாகிருஷ்ணன்)

திப்பிலி சூரணம்

சரக்குகள் :—

சிறு திப்பிலி	— பலம்	2
சிறு நெருஞ்சில்முள்	— ,,	2
சுக்கு	— ,,	2
கண்டங்கத்தரி விதை	— ,,	2
அதிமதுரம்	— ,,	2
அதிமதுரப் பால்	— ,,	2
சிற்றரத்தை	— ,,	2
அக்கராகாரம்	— ,,	2
ஊமத்தம் விதை	— தோலா	$\frac{1}{8}$
அபினி	— ,,	$\frac{1}{8}$

செய்பாகம் :—

ஊமத்தம் விதையைப் பழச்சாற்றில் மூன்று நாள் ஊறப்போட்டு உலர்த்தி வைத்துக்கொள்க. பிறகு அபினி நீங்கலாக மற்ற சரக்குகளுடன் ஊமத்தம் விதையையும் கூட்டி நன்கு இடித்துச் சூரணம் செய்து அதனில் அபினியைச் சலம்விட்டுக் கரைத்து கொஞ்சம் கொஞ்சமாகத் தெளித்துப் பிசரிக் கல்வத்திலிட்டு 2 ஜாமம் அரைத்து உலர்த்திப் பத்திரப்படுத்துக.

உபயோகிக்கும்விதம் :—வேளைக்கு 5 முதல் 10 குன்றியெடை தினம் இருவேளை தேனில் கொடுக்கவும். இச்சாப் பத்தியம்.

தீரு நோய்கள் :—இருமல், சுவாசகாசம்.

நாகம்
(துத்த நாகம்)
(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நாகபற்பத்தைக் கீழ்க்காணும் அனுபானங்களில் கொடுத்துவர அவைகளின் நேர் குறித்துள்ள நோய்கள் நீங்கும்.

துணைமருந்து	தீரும் நோய்கள்
செருப்படை இலைச்சாறு	— வாதப்பிணி
வன்னியிலைச் சாறு	— பித்தப்பிணி
தண்ணீர்க்காஞ்னிலைச் சாறு	— கனமிகுதிப்பிணி
நெல்லிச் சமூலச்சாறு	— அசாத்தியானுமான காய்ச்சலுங் குளிருமாகிய விடசுரப்பிணி
சர்க்கரை	— கயரோகம்
கரும்பஞ் சாறு	— மேகவெட்டை
மோர்	— சத்திகுன்மம்
பால்	— அத்திசுர முதலிய விடாமலெரிக்கின்ற சுரங்கள்
நெய்	— சந்நி ரோகங்கள்
வெள்ளைவேளைச் சாறு	— வெண்குட்ட முதலிய பாண்டுவைப் பிணி
தண்ணீர்	— கருங்குட்ட முதலிய மேக குட்ட வினைகள்
வெண்ணெய்	— கை கால் உதறிக் கீழே தள்ளுகிற விதிர்ப்பு வாதம்
பன்னீர்	— கபத்தைப் பற்றிவரும் சேட்பசந்நிப் பிணி
புளித்த காடிநீர்	— அரோசகப் பிணி
கட்டுக்கொடியிலைச் சாறு	— பித்த சந்நிப்பிணி
தயிர்	— தீர்க்கவினையான பொல்லாத கய ரோகம்
முலைப்பால்	— சோகசந்நி, மகாமூர்ச்சையுடன் கூடிய சந்நி, நாவரட்சி கண்ட அதிசார சந்நி, வெக்கைப் பிணிகளினு லுண்டான சந்நிகள்

துணைமருந்து	தீரும் நோய்கள்
மனிதன் சிறுநீர்	— நேத்திரவாயு, பித்தகாசப் படலம், பாரிச வாயுப் பெரும்பாடு, வேக சுரம்
உமிழ் நீர்	— பல்லைமகோதரம், நீர்க்கட்டு, வெட்டை, பாரிசசந்நி மார்புநோய், விப்புருதி.

இதனையே திருமூல நாயனார் சுருக்கி,

ஆந்துத்த நாகத்தடலைக்கனு பானஞ்
சாந்தச் செருப்படைச் சாறு முதலாக
மாந்தத் தலைப்பிணி மாறு மிதுநிச
மீந்தத்த மிறை மிறுதியில் வைத்தாரே. என்றும்,

பாம்பாட்டிச் சித்தர்,

மாதுத்த நாகத்தைச் சாம்ப லாக்கி
மாட்டுஞ் செருப்படைப் பாலி னாலே
யேதுக் கென்று மிறையாதி நோயை
யிப்பா லொழிக்க வென்றடாய் பாம்பே. என்றும்,

தேரர் கீழ்ச் செய்யுளால் விரித்து,

கானலை யாமலைகை கன்னலிக்கு மோர்சுவைதெய்ப்
கானலை யாமலைகை காசமெரி— கானலை
பாண்டுமையால் வெண்ணெய் பனிகாடி வல்லியளை
பாண்டுமை யாலைகை வெறிபாழ்

என்று கூறியிருத்தலாற் றெளிக.

புறநடை

தம்பிக்கக் காளைச் சதியாக்கலின் மூர்ச்சை
தம்பிக்கக் காளைச் சதியாவா — தப்பிக்க
வல்லாரையார் பொருவுவார் துத்த நாகமறி
வல்லாரை யார் பொருவு வார்.

(பொ-ள்) தம்பிக்கக் காளைச் சதியாக்கலின் - தம்பிக் குத்தமக்கையை முறைபிறழ மணம் செய்கின்ற பொல்லாங்கைப் போன்று, மூர்ச்சை தம்பிக்க-கடத்தின் வாயில் தமரிட்டுச் சந்திற்கு மண்பூசி மறைத்தல்போல மேற்குழையில் சுவாசத்தை ஓட வொட்டாமற் படிக்கு நிறுத்தி (சுவாச பந்தனம் பண்ணி) காளை-சேனுதிபதியாகிய கபம் மீறி பலத்துடன் மேலிடும்பொழுது விழிகள் அசைவில்லாமல் விழித்தபடியும் நீர்பெருகியும், மயிர்க் கால்கள்தோறும் விடாவியர்வை பெருகியும், வாயில் நுரைதள்ளியும், பேச்சில்லாதபடியும்

இருக்க, சதியா-அரசாகிய வாதத்தையும், மந்திரியாகிய பித்தத்தையும் நிராகரித்து அதிகரித்த சேனைத்தலைவனைக் கோட்டையாகிய மெய்யில் வைத்தால் பலப்படுவான் என்ற அவநம்பிக்கையினுல், வாதப்பிக்க-அரசனாகிய வாதம்மேலிட்டு கீல்கள், நாடி, நரம்புகள் முதலிய உறுப்புகளிலெல்லாம் தேள்கொட்டினுலொத்த கடுப்பையும் வேதனையையும், உயிர்பிரிந்து போவதுபோன்ற வாதனையையும் பண்ணுகின்ற வாதமாரக மூர்ச்சைச் சந்நிக்கு, வல்லாரை-நாகபற்பத்தை வல்லாரையிலைச் சாற்றில் அனுபானித்துக் கொடுக்கவேண்டும், ஆர்-மாரடைப்பு முதலிய மேற்படி குறி குணங்களுடனே மதுமயக்கத்தில் உள்ளபேச்சும், ஆட்டமும் முதலிய குணங்களையுடைய பித்தமாரக மூர்ச்சைச் சந்நிக்கு மருந்தைத் திருவாத்தியிலைச்சாற்றில் அனுபானித்துக்கொடுக்கவேண்டும், பொருவுவார்-மேற்படி குணங்களுடனே பல்கிட்டி, நா வரட்சியாகி மரத்தினுல் செய்த நாவைப்போலவும், பனங்கருக்கைபோல நாவிளிம்பும், உதட்டின் விளிம்பும் தோஷ குணத்தைக்காட்டித் தாகத்தை அதிகப்படுத்தி மயக்கத்தை உண்டு பண்ணுகின்ற கபமாரக மூர்ச்சைச் சந்நிக்குத் தும்பை யிலைச்சாற்றில் பற்பத்தை அனுபானித்துக் கொடுக்கவேண்டும்; துத்த நாகமறி-இந்நன்மருந்தாகிய துத்த நாகபற்பம் கிரமம்தப்பினுல் தேகத்தை ரட்சிக்காது பட்சிக்கும், வல்லாரை யார் பொருவுவார்-இதைக் கிரமப்படி பத்திய வித்தியாசம் வராதபடி நிர்வாகம் பண்ணப்பட்டவர்களுக்கு நிகரானவர்கள் இவ்வுலகில் இல்லை என்றவாறு.

இதனை மாபுராணத்தில்,

"வாதமுதன் மூவகைகண் மாறுபட வந்த
பேதமுறு மாரக வபேத மிகுமூர்ச்சை
வீதனனு பானமது மேலுரை வலாரை
யாதவடி யாகுமவை யாருமறி வாறே." என்றும்,

கோரக்கர்தம் நூலில்,

"மாரக மூர்ச்சை சனிவாத முனுகவர
ஞாத மாதவர் போனுடிய வல்லாரை
யார்ச்சிவனுர் வெற்றி யாமனு பானமிதே
தாரணி வாகடநூல் சால்பிது காண்பரே."

என்றும் புகன்றிருப்பதால் உணர்க.

வேறு

மேகவெட்டை வெப்பத்தினுல் உடலில் உண்டாகின்ற விரணப் பிணிகள் அறுவகைப்படும். அவை:—1. கடினவாத விரணம், 2. லலிதவாத விரணம், 3. கடினபித்த விரணம், 4. லலிதபித்த விரணம், 5. கடினகப விரணம், 6. லலிதகப விரணம் என்பன.

இவ்வறுவகைப் பிணிகளின் குறிகுணங்களேயும் அவைகளைத் தீர்க்கும் வகையையும் கீழ்க்காண்க.

மேகவெட்டை வாதக் கடினவிரணத்தில் மேல்மூச்சு, விக்கல், வயிற்றுவலி, பொருமல், பசிமந்தம், புளியேப்பம், விடாசுரம், இடுப்பில் கடுவனைப்போல் பட்டையாய் பருக்கட்டியுண்டாய் திமிரும், தினவும், கடினமும் பொருந்தியிருக்கும். இதற்கு நாகபற்பத்தைக் குளிர்ந்த நீரில் வேப்பெண்ணெய் அரைப்பங்கு கூட்டிக் கொடுத்து, மேல்பூச்சிற்கும் மேற்படி கலப்பையே (எண்ணெய் மாத்திரம் சரியளவு கூட்டி) உபயோகித்து இலுப்பைப் பிண்ணாக்கை அரைத்துத் தேய்த்து வெந்நீர்விட்டுச் சுத்திசெய்யவும்.

மேகவெட்டை வாதலலித விரணத்தில் வலது தோள், கை, இடுப்பு இவ்விடங்களில் வீக்கம், காதில் பரு, பக்கத்தில் சொரித் தேமலைப்போல் தினவுடன் எரிச்சல், வாய் நீர்பெருகல், வயிற்றில் எரிகுன்மத்தைப்போன்ற எரிச்சல், குடல் புரட்டல், விக்கல் முதலியன காணும், இதற்கு நாகபற்பத்தைப் பனங்கள்ளில் தேங்காய் நெய் சேர்த்துக் கொடுத்து, மேற்பூசி தேய்த்துக் கழுவ பயற்றையும் வெந்நீரையும் உபயோகிக்கவும்.

பித்தத்தினல் உண்டாம் கடின விரணத்தில் குடல் முறுக்கி நெஞ்சடைத்தல், புளியேப்பம், விக்கல், வாந்தி, செரியாமை, பேதி, வயிற்றில் எரிச்சல், உடலில் காங்கை, புயத்தில் புள்ளித் தேமல், பக்கத்தில் சொறி சிரங்கு, புண்ணுண்டாய்த் தினவு, எரிச்சல் இருக்கும். இதற்கு அனுபானம் காய்ச்சிய பட்டைச் சாராயமும் ஆமணக்கு நெய்யுமாகும். தேய்த்துக் கழுவச் சிக்கிரான் இலேயை உபயோகிக்கவேண்டும்.

பித்தத்தினல் உண்டாம் லலித விரணத்தில் விட்டுவிட்டுத் தோன்றும் உடற் காங்கை, வாந்தி வருவது போலிருத்தல், பசிகண்டு மறைதல், வயிற்றுவலி, அஜீரணம், பேதி, முழங்கால் அடியில் கட்டி கண்டு பிறகு புண்ணுகிப் புண்ணீரும் இரத்தமும் கசிந்துகொண்டு தினவைக் கொடுக்கும். இதற்கு அனுபானம் வெந்நீரும் இலுப்பை நெய்யும் ஆகும். கழுவுவதற்குப் புளியிலேயிட்டுக் காய்ச்சிய நீரை உபயோகிக்கவும்.

கபக் கடினவிரணத்தில் வாய், நாக்கு அடியில் புண், பல்லீற்றடியில் இரத்தம் வடிதல், வாய் மூச்சு நாற்றம், வயிறு வீக்கம், வலியின்றிக் கால் வீக்கம், பசியின்மை, கால் பக்கம் இவ்விடங்களில் கட்டியுண்டாகிப் புண்ணுய் அதில் சீழ் இரத்தம் வடிதல் முதலியனவாம். இதற்கு அனுபானம் முந்திரிப் பழச்சாறும், காட்டாமணக்கு நெய்யுமாகும். தேய்த்துக் கழுவச் சிகைக்காய் ஆகும்.